**<u>Case No. STC. No.64/2025, Dated: 25.03.2026</u>**

**<u>PW-4- கந்தசாமி த/பெ. வெள்ளையன் (CMP.No.721/2025-ன் படி மனு அனுமதியின் பெயரில் குறுக்கு விசாரணை)</u>**

**(சத்தியபிரமாணம் திரு. E. கோவிந்தராசு, இருக்கை எழுத்தர் நிலை-3 அவர்களால் செய்யப்பட்டது).**

**<u>(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 12.04 A.M):-</u>**

**<u>(எதிரி ஆஜர்) எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1. அ.சா.2 எனது உறவினரா என்றால், அவர் எனது தம்பி உறவு ஆவார். அ.சா.1 எனது மச்சான். வழக்கு சம்பவம் நடந்த தினத்தன்று நான் காவல்நிலையம் சென்றேனா என்றால், போன் மூலம் தகவல் சொன்னார்கள் சென்றேன். ராஜா, ஜானகி, சிவக்குமார் ஆகியோரை போலீசார் புகார் கொடுத்தபோது விசாரித்தனரா என்றால், விசாரித்தனர். என்னை விசாரித்தனாரா என்றால், விசாரிக்கவில்லை. போலீசார் என்னிடம் எங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால், EB மணி வீட்டு பக்கத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். EB மணி வீட்டு பக்கத்தில் வைத்து கையெழுத்து வாங்கியது எப்போது என்றால், புகார் கொடுத்த அடுத்த நாள் கையெழுத்து வாங்கினார்கள். எத்தனை மணிக்கு கையெழுத்து வாங்கினர் என்றால், காலை 11.00 மணிக்கு. என்னிடம் மட்டும் கையெழுத்து பெற்றனரா என்றால், இல்லை, உடனிருந்த சந்திரன் த/பெ பழனிசாமி என்பவரிடம் கையெழுத்து பெற்றனர். நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்து கையெழுத்து போட்டேனா என்றால், "ராஜா என்பவரை ஆஜர் எதிரி நெஞ்சின்மேல் எட்டி உதைத்ததாக எழுதியிருந்த தாளில் கையெழுத்து செய்தேன். EB மணி வீட்டிலிருந்து அ.சா.2ன் வீடு எவ்வளவு தூரம் என்றால்,

பக்கத்து பக்கத்தில் உள்ளது. அந்த இடத்தில் நிறைய கடைகள் வீடுகள் உள்ளது என்றால், சரிதான். போலீசார் விசாரணை செய்து கையெழுத்து வாங்கிய சமயத்தில் ஊர் பொதுமக்கள் இருந்தனர் என்றால், சரிதான். ஊர் மந்தையில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால், சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால், அவர் கேட்டுகொண்டதனால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், என்னிடம் கையெழுத்து பெறவில்லை என்றும், வழக்கிற்காக போலீசார் கையெழுத்து பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.18A.M):-**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.